# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 36

# யூபிலியின் பிரமாணம்



# The Jubilee Law

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# யூபிலியின் பிரமாணம்

# The Jubilee Law



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

இஸ்ரயேலருக்கு மோசேயின் மூலம் தேவன் அருளின கட்டளைகளுள், ஒரு கட்டளையைக் குறித்து இன்றைக்கு நாம் கற்கப்போகிறோம்.

அது யூபிலி நியாயப்பிரமாணம் என்றழைக்கப்படுகிறது.
இந்தப் பிரமாணத்தைக் குறித்து பின்வரும் வசனங்களில் வாசிக்கிறோம் -

**லேவியராகமம் 25:8-10**

"அன்றியும், ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக, அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமுமாகும். அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும். பாவ நிவாரண நாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும். ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள். அது உங்களுக்கு யூபிலி வருஷம். அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும், தன் தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக் கடவன் "

கர்த்தர் இஸ்ரயேலருக்குத் தந்த யூபிலி நியாயப்பிரமாணம் இதுவே. 7 ஓய்வு வருடங்களுள்ள ஏழு ஏழு வருடங்கள் என்பது 7 X7=49வருடங்கள் ஆகும். இந்த 49ம் வருடம் முடிந்து 50ம் வருடமானது யூபிலி வருடம் என்றழைக்கப்படுகிறது.



இந்த யூபிலியை எக்காளம் ஊதி பிரகடனப்படுத்துவர். எக்காளம் ஊதும் கருவி ஆட்டுக்கடாவின் கொம்பிலிருந்து உருவாக்கப்பட்டது. யூபிலி என்றால் இன்றைய நாளில் கொண்டாடுகின்ற பொன்விழா (Golden Jubilee) , வெள்ளிவிழா( Silver Jubilee) வைர விழா(Platinum Jubilee) என்பவை, இந்த வேதாகமச் சொல்லிலிருந்தே வழக்கத்திற்கு வந்தன.

இனி இந்தப் பிரமாணம் அனுசரிக்கப்படுவதற்கான நோக்கங்களையும், விளக்கங்களையும் இனி புரிந்துகொள்வோம்.

**லேவியராகமம் 25:13-17**

"இந்த யூபிலி வருடத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன். ஆகையால் பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது. யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்பப் பிறனிடத்தில் கொள்ளுவாயாக. பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப அவன் உனக்கு விற்பானாக. பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால் விலை குறையவும்வேண்டும். உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது. உன் தேவனுக்குப் பயப்படவேண்டும். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்"

இந்த 50ம் வருடமானது விற்றவனும் வாங்கியவனும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும் நிலத்தை அடமானம் வைத்தவர்கள் திரும்பப் பெறும் காலமாகவும் உள்ளது.

நிலம் மற்றும் பொருட்களை வாங்குவதும் விற்பதும்கூட அடுத்துவரும் யூபிலி வருடத்திற்கு வருடங்கள் கணக்கிடப்பட்டு யூபிலி வருடத்திற்கு அநேக வருடங்கள் இருந்தால், விலை அதிகமாகவும், குறைவாக இருந்தால் விலை குறைவாயும் நிர்ணயிக்கப்பட்டது.

இஸ்ரயேலர் தங்கள் யூபிலி ஆண்டின்போது






உணவுப்பண்டங்களை சேமித்து வைப்பதும், விடுதலையை அறிவிப்பதும் அந்ததேசம் முழுவதும் நடைபெறும்

ஏனெனில் யூபிலி வருடமாகிய 50ம் வருடத்தின்போதுஅனைத்து உடைமைகளும், சொத்துக்களும் சொத்துக்கு உரிய உண்மையான உரிமையாளனிடம் திரும்பித் தரப்படுதல் வேண்டும். வறுமையின் காரணமாக அடிமையாக விற்கப்பட்டவர்கள் யூபிலிவருடத்தின்போது விடுவிக்கப்பட வேண்டும்.

சொத்துக்களையும் உடைமைகளையும் கையாள்வதில் சமச்சீரான நிலை நிலவுவதற்கும், ஒரு சிலரது அதிகாரத்தினைக் கொண்டும்,பலத்தைக்கொண்டும் சொத்துக்களை அபகரிக்கக்கூடாது என்பதற்காகவும் தேவன் இந்தப் பிரமாணத்தை உறுதிமொழியாக அளித்தார்.

ஆனால் இஸ்ரலேருக்கோ இந்தப் பிரமாணம் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணினது. அந்த தேசத்துக்காக இரண்டு தொடர்ச்சியாக ஓய்வு வருடங்கள் 49ம் வருடத்திலும், 50ம் வருடத்திலும் கொண்டாடப்பட்டது. இந்த இரண்டு வருடங்களும் இஸ்ரயேலர் வயலில் நடவும், விளைச்சலை உண்டாக்கவும், நிலத்தைத் தொடவும் கூடாது. இந்த சூழ்நிலையில் எப்படி இந்த இரு வருடங்களும் அவர்கள்எப்படி ஆகாரத்தேவைகளை பூர்த்தி செய்வர்? என்பதை இஸ்ரயேலரிடத்தில் எழுந்த கேள்வி. தேவன் இதற்கு விளக்கமும், வாக்குறுதியும் அளித்திருக்கிறதை வாசிக்கிறோம் -

**லேவியராகமம் 25:20-22**

‘ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம் ? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே? என்று சொல்வீர்களானால், நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுவேன். அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத் தரும். நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம் மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவீர்கள். அதின் பலன் விளையும்வரைக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்“


யூபிலி ஆண்டின்போது நிலம் பயிரிடப்படாமல் நிலத்துக்கு ஓய்வு அளிக்கவேண்டும் என்பது தேவ கட்டளை

ஆம். ஜனங்களது தேவைக்காகவும், ஜீவனத்திற்காகவும் தேவன் வாக்குறுதி தந்துள்ளார். இதனால் இந்தப் பிரமாணம் செயல்படுவதற்கானஎவ்வித ஐயமும் ஏற்படாதபடி ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

தேவனது தெய்வாதீனமான வழிநடத்துதல், மூன்று வருடங்களுக்குத் தேவையானவற்றை முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தது. தேவனது அன்பும், பராமரிக்கும் தன்மையும் நமக்கு எவ்வளவு மிகப்பெரிய பாடங்களைக் கற்றுத் தருகிறது. திருச்சபையாராகும்படி அழைக்கப்பட்ட நமக்கு யூபிலி நியாயப்பிரமாணம் என்ன பாடங்களைத்தருகிறது?

**ரோமர் 15:4** ல் நாம் காணலாம் -

‘தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது“

மேற்கண்ட வசனத்தில் ‘நமக்கு” என்று குறிப்பிடப்பட்டுள்ளது, மாம்சத்தில் உள்ள திருச்சபையாரையே குறிக்கும். ஆகவே திருச்சபையாராகும்படி அழைக்கப்பட்ட நாம் பழைய ஏற்பாட்டிலிருந்து அநேக பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். இதற்கு ஆதாரமாக பின்வரும் வசனமும் உள்ளது -

**எபிரேயர் 10:1**

‘ நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல்,அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால் வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது”

ஆம். நியாயப்பிரமாணமானது வரப்போகிற அநேக நன்மைகளை நிழலாய் கொண்டுள்ளது. இவைகள் இரட்சிப்பைக் குறித்த தெய்வீகத் திட்டத்தில், சுவிசேஷயுகத்திலும், ஆயிர


வருடாட்சியிலும் நிறைவேறப்போகிற காரியங்களுக்கு நிழலாய் இருக்கின்றன.

இவ்வாறாக நியாயப்பிரமாணங்கள்,தேவனால் மோசேக்கு தேவதிட்டத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கும் மாதிரிகைகளாக கொடுக்கப்பட்டது. இந்தப் பிரமாணத்தைக் குறித்து கூறப்பட்டுள்ளதை வாசிப்போம் -

**மத்தேயு 5:18**

"வானம் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"





இதன் பொருள் என்ன?

நியாயப்பிரமாணத்துக்கு மாபெரும் முக்கியத்துவம் உண்டு. இதனை நிழலாக பஸ்கா ஆடு அடிக்கப்பட்ட சம்பவத்தின் பொருளை கவனிக்கும்போது தெளிவாகிறது. பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்பொருட்டு பஸ்கா ஆடு வருஷந்தோறும் அடிக்கப்பட்டது

**யாத்திராகமம் 12:43**

"மேலும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி - பஸ்காவின் நியமமாவது, அந்நிய புத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கவேண்டாம்"

இந்த ஆடு தேவாட்டுக்குட்டியாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. முழு உலகின் பாவங்களின் பொருட்டு இது அடிக்கப்பட்டது.

**யோவான்1:29** "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி"

**1கொரிந்5:7** "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே"

(குறிப்பு :- பஸ்கா ஆடு கொல்லப்படும்போது, அதன் ஒரு எலும்பாகிலும் முறிக்கப்படவில்லை. அவ்வாறே பஸ்கா பண்டிகையின் நாளில் மரித்த நம் கர்த்தரின் ஒரு எலும்பாகிலும் முறிக்கப்படவில்லை)

இவ்வாறாக தேவதிட்டத்தில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணங்களிலிருந்து அநேக சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். இதன் அடிப்படையில் யூபிலி நியாயப்பிரமாணத்தின் பொருளையும் அதன் முக்கியத்துவத்தையும் குறித்து இனி காணலாம் -

இந்த யூபிலி நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேலர் எப்பொழுதிலிருந்து ஆசரிக்கத் தொடங்கினர்?

இதற்கான விடை கீழ்க்கண்ட வசனத்தில் தெளிவாகிறது -

**லேவியராகமம் 25:2**

"நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்கென்று ஓய்வு கொண்டாடவேண்டும்"

ஆம். யூபிலி நியாயப்பிரமாணமானது இஸ்ரயேல் கானான் தேசத்தைச் சென்றடைந்தபிறகே அனுசரிக்க தொடங்கினர்.

அதுமுதல் 50 வருடத்திற்கு ஒருமுறை (தேசத்தின் ஏழு ஓய்வுகளைக்கடந்து 7X7=49) யூபிலி கொண்டாடப்பட்டது. இது யூதாவின் கடைசிராஜாவாகிய சிதேக்கியாவின் இராஜ்யம் வீழ்ச்சியடையும்வரை தொடர்ந்து கொண்டாடப்பட்டுவந்தது. அதன்பின்பு முழு தேசமும் பாபிலோனுக்கு அடிமையாக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர். 70 வருடங்கள் இந்த சிறையிருப்பு நீடித்தது.

இந்த 70வருடங்கள் பாபிலோனில் சிறையிருப்பிலிருந்ததால் இஸ்ரயேல் தேசம் அவ்வாண்டுகளில் யூபிலியை அனுசரிக்க முடியாமற்போயிற்று. இதனால் கானானை சுதந்தரித்தது முதற்கொண்டு தொடர்ச்சியாக அனுசரித்துவந்த யூபிலிகொண்டாட்டம் தடைபட்டது.

அப்படியானால் இஸ்ரயேலர் பாபிலோன் சிறையிருப்பில் அனுசரிக்க முடியாதுபோன யூபிலிக்கு முன்னர், எத்தனை யூபிலி கொண்டாடினர்?

வேதாகமக் காலக்கணக்கிலிருந்து இதற்கான விபரங்களைஅறிந்துகொள்கிறோம். அவை பின்வருமாறு -

| | | |
|---|---|---|
| ⇨ கானான் தேசத்தில் பிரவேசித்ததுமுதல் தேசம் பிரிக்கப்பட்டதுவரை | - | 6 வருடங்கள் |
| ⇨ நியாயாதிபதிகளின்காலம் | - | 450 ,, |
| ⇨ இராஜாக்களின்காலம் | - | 513 ,, |
| | | ---------- |
| | | 969 வருடங்கள் |
| | | ---------- |

இவ்வாறாக, கானானை சுதந்தரித்தது முதல் பாபிலோன் சிறையிருப்பு துவங்கும்வரை - 969 வருடங்கள்

**ஆகவே இஸ்ரயேலர் அனுசரித்த யூபிலிகள் = 969/50 = 19 யூபிலிகள் + 19 வருடங்கள்(20வதுயூபிலியின் வருடங்கள்)**

ஆம். இஸ்ரயேலர் 19 யூபிலிகளை அனுசரித்தபிறகு, 20ம் சுற்றில் 19 ஆண்டுகள் கழிந்திருந்தது. 19ஆண்டுகள் ஆனநிலையில் பாபிலோனில் சிறையிருப்புக்கு சென்றனர்.

இந்த விபரங்களைக்கொண்டு, இஸ்ரயேலர் பாபிலோனில் 70 வருட சிறையிருப்பிலிருந்த காலங்களைப்பற்றி தேவன் எரேமியா மூலம் பேசின முக்கியமான வார்த்தைகளை தியானிப்போம்.

**2நாளாகமம் 36:21**

"கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம்

தன்னுடைய ஓய்வு வருடங்களை இரம்மியமாய் அனுபவித்துத் தீருமட்டும், அது
பாழாய்க் கிடந்த நாளெல்லாம் , அதாவது எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது"

"எழுபது வருடங்கள்" ஓய்வு வருடங்களாக இஸ்ரயேலருக்கு இருந்தது எதைக் குறிக்கிறது? இஸ்ரயேலர் யூபிலி நியாயப்பிரமாணத்தை எந்தளவு சிரத்தையோடு அனுசரித்தார்கள் என்பதற்கு எந்த சான்றும் இல்லை.ஆனால் இங்கு தேவன் 70 ஓய்வு நாட்களைஅடையாளமாகக் கொடுத்திருந்தார். இதற்கு என்னபொருள்?

இதனைப் புரிந்துகொள்ள, முதலாவதாக யூபிலி நியாயப்பிரமாணம் நிழலாக சொல்லப்பட்டது என்பதையும், பின்னர் வரவிருக்கும் மாபெரும் மீட்பையும், மறுசீரமைத்தலையும் பற்றியது என்பதையும் அறிந்திருக்கவேண்டும். நிழலான யூபிலி இஸ்ரயேலருக்கு உரிமைகளை திரும்ப பெற்றுத்தந்து விடுதலை அளித்தது. இதன் நிஜம், இதைக் காட்டிலும் மிகப்பெரிய விடுதலையை பெற்றுத்தருவதாக இந்த மீட்பும் மறுசீரமைப்பும் இஸ்ரயேலருக்கு மாத்திரமல்ல, முழு உலக மனுக்குலத்திற்கும் உரியதாகிறது. இதன் காலத்தைக்குறித்து

**அப்போஸ்தலர் 3:19**

"கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும்.."

**அப்போஸ்தலர்3:21**

"தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும்
உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை
ஏற்றுக்கொள்ளவேண்டும்"

**மத்தேயு19:28**

"மறு ஜென்மக் காலத்தில் மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல்
வீற்றிருக்கும்போது.. "

நிஜமான யூபிலியையே மேற்கண்ட வசனங்கள் எடுத்தியம்புகின்றன.

இந்த நிஜமான மாபெரும் யூபிலியாகிய மறுசீரமைக்கும் காலங்கள் எப்பொழுது துவங்கும்? இதற்கான விடை 70 ஓய்வு வருடங்களைக் குறித்து நிழலாக சொல்லப்பட்டவைகளில் மறைந்துள்ளது.

'தேசம் பாழாய்க்கிடந்த நாளெல்லாம்,
அதாவது எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது" நிழலான யூபிலி துவங்கினதிலிருந்து,
"நிஜமான" யூபிலி துவங்கும் வரையிலான காலத்தை 'தேசம் பாழாய்க்கிடந்த எழுபது வருஷம்"
என்றுஅழைக்கப்படுகிறது. ஆக மொத்தம் 70 யூபிலிகள் இருக்கும் என்பதுதெளிவாகிறது.

70 யூபிலி சுற்றுகளில், இஸ்ரயேலர் 19 யூபிலி சுற்றுக்களையேஅனுசரித்துள்ளனர்.

| | |
|---|---|
| மொத்த யூபிலிகள் | - 70 வருடங்கள் |
| இஸ்ரயேலர் அனுசரித்தவை | - 19 ,, |
| | ------ |
| மீதமுள்ள யூபிலிகள் | - 51 வருடங்கள் |
| | ------ |

இந்த 51யூபிலி ஓய்வுக்காலங்கள் எதைக்குறிக்கிறது?

இது நிஜமான மாபெரும் யூபிலி துவங்கும் வரை நீடிக்கும் காலப்பகுதியைக் குறிக்கிறது.

இந்த 51 யூபிலி சுற்றுக்கள் யூபிலி வருடமற்ற(50வது வருடம்) சுற்றுக்களாக இருந்தன. இவ்வாறு 70 ஓய்வு நாட்கள் என்பது

| | | |
|---|---|---|
| ☞ யூபிலி கொண்டாடிய 19 சுற்றுக்கள்(50 X19) | | =950 வருடங்கள் |
| ☞ தேவனால் ஏற்படுத்தப்பட்ட யூபிலி வருடங்களற்ற 51சுற்றுக்கள் (51 X 49) | | = 2499 ,, |
| (49 வருடங்கள்= ஏழு ஓய்வு வருடங்களின் சுற்று 7X 7 | | -------- |
| | **70 ஓய்வுகள் (Sabbaths)** | **=3449 வருடங்க்ள** |
| | | -------- |

இவ்வாறாக நிஜமான யூபிலி வருடங்கள் துவங்கப்பட 3449 வருடங்கள் செல்லும் என்பதை அறிகிறோம்.

இனி இந்த வருடம் எதை அடையாளங் காட்டுகிறது என்று காண்போம்.

| | |
|---|---|
| ☞ இஸ்ரயேலர் கானானை அடைந்ததுமுதல்,<br>பாபிலோன் சிறையிருப்பு துவங்கும் காலம்வரை | - 969 வருடங்கள் |
| ☞ சிறையிருப்பின் காலங்கள் | - 70 ,, ,, |
| ☞ கோரேஸ் ராஜாவின் முதலாம் வருடம்<br>சிறையிருப்பினின்று விடுவிக்கப்பட்டது முதல் கிபி1வரை | - 536 |
| | ------------- |
| கிறிஸ்து பிறப்பதற்கு முன் உள்ள மொத்த வருடங்கள் | - 1575 வருடங்கள் |
| | ------------- |

ஆகவே மொத்த ஓய்வு வருடங்கள் 3449இலிருந்து, 1575வருடங்களைக் கழித்தோமானால் = 3449 (-) 1575 = கிபி1874 வருகிறது

இவ்வாறாக **'மறுசீரமைப்பின் மாபெரும் யூபிலி" கிபி 1874இல் துவங்குகிறதை அறிகிறோம்.** இந்த ஓய்வு நாள் நிழலாக கூறப்பட்டதன்படி ஒரு வருடத்திற்கு மட்டும் இராமல்,1000 வருடக் காலங்கள் நீடிக்கும் என்றறிகிறோம்.

இந்த யூபிலி வருடமானது இன்னொரு வழியில் கணக்கிடப்படுகிறது. ஒரு யூபிலி சுற்று 50 வருடங்களடங்கியது. இதை 50 X 1 என நிழலாகக் கூறலாம்.

நிஜமான யூபிலியின் பொருள் மகா உன்னதமானதும், பிரமாண்டமானதுமாய் இருக்கிறபடியால், ஒவ்வொரு நிழலான யூபிலி வருடத்திற்கும் 50 வருட கால அளவுவைத்து கணக்கிடவேண்டும்.

இவ்வாறாக நிஜமான கணக்கீடானது 50 X 50 = 2500 வருடங்கள்.

2500வது வருடமானது மாபெரும் யூபிலி ஆரம்பமாவதை அடையாளங் காட்டுகிறது.

நிழமான யூபிலியில் ஒரு வருடம் என்று கூறப்பட்டது, நிஜமான யூபிலியாகிய ஆயிரமாண்டு காலத்தைக் குறிக்கிறது.

**பூமியின் மாபெரும் யூபிலிக்கு யூபிலி நியாயப்பிரமாணம் ஒரு நிழல் மட்டுமே**

ஆகவே நாம் பார்த்ததிலிருந்து , மாபெரும் யூபிலி எவ்வருடம் துவங்கும்?

நிழலாக இஸ்ரயேலர் அனுசரித்த யூபிலியின் கடைசி சுற்று முடிந்தவுடன் 50X 50 வருடங்கள்

நிஜமான யூபிலி ஆரம்பிக்கிறது.

கடைசி யூபிலி எப்பொழுது அனுசரிக்கப்பட்டது?


சிதேக்கியா ராஜாவின் ஆளுகை அகற்றப்பட்ட வருடமாகிய கிமு 606 இலிருந்து 19 வருடங்களைக் கழிக்கவேண்டும்.
கிமு 606 (-) 19= கிமு 625 (கிமு வருடங்களானபடியால், கூட்டப்படவேண்டும்)
இப்படியாக நாம் பார்க்கும்போது, கிமு 626 இல் யூபிலி 2500 ஆண்டுகளின் துவக்கமாகக் கொண்டு கணக்கிடவேண்டும். ஆனால் நிஜமானயூபிலி 2500 ஆம் வருடத்தின் முடிவில் துவங்காமல், 2499ம் வருடத்தில் துவங்குவதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆகவே நிஜமான யூபிலியானது 2499 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்ததிலிருந்து,இஸ்ரயேலர் கடைசியூபிலி அனுசரித்த வருடத்தை கழிக்கவேண்டும்.

**2499 (–) 625கிமு = கிபி 1874**

(இஸ்ரயேலர் கடைசி யூபிலி அனுசரித்த வருடம்)

கிபி 1874ல் மாபெரும் யூபிலி துவங்கப்பட்டது இதன்மூலம் ஊர்ஜிதமாகிறது.
இதை கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் தெளிவாக புரிந்துகொள்ளலாம்.






ஆகவே பூமியின் மாபெரும் யூபிலி 1874இல் துவங்கி, 1000 ஆண்டுகள் நீடிக்கும். அதாவது கிபி 2874வரை.

அனைத்தையும் மறுசீரமைக்கும் காலங்கள் என்றும், இளைப்பாறுதலின் காலங்கள் என்றும் அப்போஸ்தலர்3:19-21 இல் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இக்காலங்களில் தேவன் மனுக்குலத்தை மாபெரும் நன்மைகளால் ஆசீர்வதிப்பார். இதனை பின்வரும் வசனத்தில் காண்கிறோம்.

**ஏசாயா 25:6-8**

"சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார், அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்ச ரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையானதிராட்சரசமும்

நிறைந்த விருந்தாயிருக்கும். சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல
ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும்,இந்த மலையிலே அகற்றிப்போடுவார். அவர்
மரணத்தை ஜெயமாக விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து
கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும்
நீக்கிவிடுவார். கர்த்தரே இதைச் சொன்னார்"

**"கொழுமையான பதார்த்தங்களின் விருந்து"** - மனுக்குலம் ஜீவனுக்கு திரும்புகிற இக் காலகட்டத்தில், தேவனிடமிருந்து பெறப்போகும்ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது.

**"பழமையான திராட்ச ரச விருந்து"** - மனுக்குலத்திற்கானதெய்வீக திட்டத்தின் சத்தியங்கள்பொழியப்படுவதைக் குறிக்கும்.

மேலும் 1874ம் வருடத்திற்குப் பின்பு, "இளைப்பாறுதலின் காலங்களில்" படிப்படியாக நிறைவேறும் என்று சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்கள் நம்மைச் சுற்றி மாற்றங்களை ஏற்படுத்தி வருவதை நாம் காண்கிறோம்.



உண்மையாகவே பூமியின் நிஜமான மகா யூபிலி துவங்கிவிடடது.இதன்மூலம் மனுக்குலம் முழுவதும் வெகு சீக்கிரத்தில் விடுதலையாக்கப்பட்டு, சீர்பொருந்துவார்கள்.

இறுதியாக, நிழலான யூபிலியின் பிரமாணத்தில், யூபிலி வருடத்தையும் அதன் துவக்கத்தையும் அறியக்கூடியவர் "ஆசாரியன்" என்று நாம் வாசிக்கிறோம்.

**லேவியராகமம் 25:9**

"அப்பொழுதும் ஏழாம் மாம் பத்தாந்தேதியில் எக்காளச் சத்தம்
தொனிக்கும்படி செய்யவேண்டும். பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்
சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்"

இதன் நிஜத்திலும், தேவனுடைய மணவாட்டியாகிய ஆசாரியர்களே இதை முதலில் அறிந்துகொள்வார்கள். அந்த ஆசாரியர்களைக் குறித்து வாசிக்கையில்,

**வெளிப்படுத்தல் 1:6**

"..தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக
நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின..."

இந்த நிஜமான ஆசாரியர்கள் தங்களைமுழுவதும் அர்ப்பணித்து, கர்த்தராகிய இயேசுவை அவருடைய அடிச்சுவடாகிய பலியின் ஜீவியத்தில் பின்பற்றுகிறவர்களாவர்.

ஆம். நிழலான ஆசாரியர்கள் இஸ்ரயேலருக்கு யூபிலியை அறிவித்ததுபோல,நிஜமான ஆசாரியர்களாக ஆகக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிற நாம், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தேவனோடு நல்மனச்சாட்சியின்உடன்படிக்கை செய்துகொண்டு,கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகி, இப்பொழுது முழு உலகத்திற்கும் துவங்கியிருக்கிற மகா ஆசீர்வாதமான யூபிலியை அறிவிப்போம்.

**தேவன் தாமே நம் அனைவரோடும் இருந்து, அவரது சத்தியங்களில் வளரவும்,
அவர் சித்தம் செய்யவும் வழிநடத்துவாராக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/